**COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

09.07.2025

O.S. No. 276/2022

P.W.1 திரு.M.S.மணி

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (3 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகள் தரப்பில்) -**

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலுக்கு நான் பலதடவை சென்றிருக்கேனா என்றால் சென்றிருக்கேன். கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலின் வடக்கு பக்கம் திருமதில் சுவர் சுமார் 25 அடி உயரம் இருக்கும் என்றால் சரிதான். அந்த வடக்கு பக்கம் திருமதில் சுவருக்கு வடக்கே அதாவது பட்டிகை சொத்திற்கு தெற்கே உள்ள பகுதி கோவிலின் 4 ஆவது பிரகாரம் என்றால் சரியல்ல, அது ரோடு. கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலுக்கு 4 பிரகாரம் உண்டு என்றாலும் அது 4 ஆவது பிரகாரம் என்றாலும் சரியல்ல. அந்த 4 ஆவது வெளி பிரகாரத்தின் வழியாகதான் வடக்கு பார்த்து அந்த கோவிலின் திருவாசல் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த திருவாசலிலிருந்து போவதுதான் சன்னதி தெரு என்றால் சரிதான். கருவறையை சுற்றி இருப்பது 1 வது பிரகாரம், பைரவர் சன்னதி மற்றும் ஆஞ்சநேயர் சன்னதியை சுற்றி இருப்பது 2 வது பிரகாரம், முருகன் கோவில், ஐயப்பன கோவில் ஆகியவற்றை சுற்றி இருப்பது 3 வது பிரகாரம் என்றால் சரிதான். அதற்கு அடுத்ததாக உள்ளதுதான் நான் ரோடு என்று சொல்லும் 4 ஆவது

பிரகாரம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல ரோடும் அல்ல, பொதுப்பாதையும் அல்ல என்றாலும் பகவதி அம்மன் கோவிலின் 4 வது பிரகாரம் என்றாலும் சரியல்ல. அந்த 4 வது பிரகாரம் கோவிலின் நான்கு பக்கமும் திருமதில் சுவரை சுற்றி உள்ளத பிரகாரம் என்றால்சரியல்ல, மேற்கு பக்கத்தில் கடைகள் உள்ளது. சன்னதி தெரு தெற்கு வடக்காக உள்ளது என்றால் சரிதான். திருவாசலுக்கு முன்னால் ராஜகோபுரம் கட்ட வேண்டி மன்னர் காலத்திலேயே அடித்தளம் போட்டு கல்லால் தூண்கள் கட்டப்பட்டு விடபட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. அந்த ராஜ கோபுரம் கட்டுவதற்காக அரசாங்கம் முயற்சி எடுக்கிறது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. 4 வது வெளி பிரகாரத்தின் கிழக்கு பக்கம் கல்லால் ஆன 7 படிகள் உள்ளது என்றால் கல்லால் ஆன படிகள் உள்ளது, எத்தனை படிகள் என்று தொியாது. அதேபோல 4 வது வெளி பிரகாரத்தின் மேற்கு பக்கம் கல்லால் ஆன 13 படிகள் உள்ளது என்றாலும் அந்த படிகளில் ஏறிதான் காந்தி மண்டபம் இருக்கும், பிரதான சாலைக்கு செல்ல வேண்டும் என்றால் கல்லால் ஆன படிகள் உள்ளது, எத்தனை படிகள் என்று தொியாது, அந்த படிகள் மூலம்தான் பிரதான சாலைக்கு செல்ல வேண்டும். மேற்கு பக்கம் உள்ள படிகளை ஒட்டிதான் பட்டிகை சொத்தின் மேற்கு பக்கம் எல்கை முடியும் என்றால் சரியல்ல. அதை தாண்டி போய் முடியும். 4 வது வெளி பிரகாரத்தின் மேற்கு பக்கம் உள்ள படிகளை தாண்டி இரு பக்கமும் 158 கடைகள் உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. பகவதி அம்மன் கோவிலை சுற்றி 20 காலி மனைகள் உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. பட்டிகை சொத்தின் மேற்கு பக்கம் பயோனியர் கார்த்திகை லாட்ஜ்

உள்ளது என்றால் சரிதான். வடக்கு பக்கம் சரவண லாட்ஜ் உள்ளது என்றால் சரிதான். 4 வது வெளிபிரகாரம்தான் கோவிலுக்கு சொந்தமான கிழமேல் பாதை என்றால் அது குறித்து எனக்கு தொியாது. நான் சொல்லும் தாவா சொத்தில் தற்போது வேதபாடசாலை நடக்கவில்லை என்றால் சரிதான். தற்போது எத்தனை பேர்கள் வேலை பார்க்கிறார்கள் என்றால் 2 பேர்கள் வேலை பார்க்கிறார்கள். ஒருவர் பெயர் ஆனந்த் மற்றொருவர் பெயர் ஆறுமுகம். அவர்கள் இருவரும் தினமும் வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்வார்களா என்றால் செய்வார்கள். பட்டிகை சொத்தில் எந்த சிமெண்ட் கூரை வேய்ந்த கட்டிடம் கிடையாது என்றால் 4 கடைகள் கொண்ட சிமெண்ட் கட்டிடம் உள்ளது. பட்டிகை சொத்தின் முகப்பில் என்ன போர்டு வைத்துள்ளோம் என்றால் ஹிந்து யாத்ர நிவாஸ் போர்டு வைத்துள்ளோம். எப்போதிலிருந்து அந்த போர்டு வைத்துள்ளோம் என்றால் 2015 லிருந்து வைத்துள்ளோம். இதற்கு முன் நாங்கள் தாக்கல் செய்த வழக்குகளிலோ மனுக்களிலோ அவ்வாறு ஹிந்து யாத்ர நிவாஸ் போர்டை பட்டிகை சொத்தின் முகப்பில் வைத்துள்ளதாக சொல்லவில்லை என்றால் சரிதான். விஸ்வ ஹிந்து கேந்திரா எந்த வருடம் நிறுவப்பட்டது என்றால் 1978 ல் நிறுவப்பட்டது. அதன் பதிவு எண் தொியுமா என்றால் ஞாபகம் இல்லை. அதை பதிவு செய்யும்போது அதன் பெயர் என்ன என்று தொியுமா என்றால் தொியாது. பட்டிகை சொத்து புறம்போக்கு நிலம் என காட்டுவதற்கு எந்த ஆவணமும் நான் பார்க்கவும் இல்லை என்றாலும் நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல, பார்த்துள்ளேன், அதை தாக்கலும் செய்துள்ளேன். அந்த ஆவணம் எத்தனையாவது ஆவணமாக பிரமாண

வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் வா.சா.ஆ. 28 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 28 ஆவணத்தில் சர்வே எண். 1 உட்பிரிவு லெட்டர் 1 என்பதற்கு எதிரே 21 வது காளத்தில் குமரி பகவதி அம்மன் கோவில் என்று உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 1 லெட்டர் 31 க்கு எதிரே 21 வது காளத்தில் கணக்கு சாவடி களஞ்சியம் விறகுபுர என உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 122 ற்கு எதிரே 21 வது காளத்தில் முசாவரிபங்களா என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோவிலையும், கோவிலை சார்ந்த இடங்களையும் புறம்போக்கு இடம் என குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரியல்ல. கோவில் இடங்களை கோவில் இடம் என குறிப்பிடுவார்கள். வா.சா.ஆ. 27 ஆவணத்தில் ரீசர்வே எண். 678/41 ற்கு 21 வது காளத்தில் கோவில் தானிய களஞ்சியம் என உள்ளது என்றால் சரிதான். 1956 ஆண்டிற்கு முன்னால் திருவாங்கூர் சமஸ்தானம் எப்படி இருந்தது என்று எனக்கு நேரடியாக தொியுமா என்றால் நேரடியாக தொியாது. புறம்போக்கு நிலங்கள் அரசுக்கு உரிமைப்பட்டது என எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் கேள்விப்பட்டதை சொல்லியுள்ளேன். முன்நாட்களில் கோவிலில் சிப்பந்திகள் அனைவருக்கும் கட்டு சோறு தருவது கோவில் நிருவாகத்தினரின் வழக்கம் என்றால் சரிதான். பிரமாணர்களுக்கு உணவு வழுங்கு ஊட்டுப்புரை நடத்தி வந்ததாக எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் கேள்விப்பட்டதை சொல்கிறேன். கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் பழைய சர்வே எண். 1/1 ல் 8 ஏக்கர் 17 சென்டில் ஒரு சிறிய இடத்தில் நான்கு புறமும் சுவர்கள் எழுப்பப்பட்டு அதில் இயங்கிவருகிறது என நான் கூறியுள்ளதற்கு ஆதரவாக அந்த இடத்தை அளந்து

பார்த்தேனா என்றால் இல்லை. அது சம்பந்தமாக ஆவணங்கள் எதையும் பார்த்தேனா என்றால் இல்லை. அதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. மூலம்திருநாள் மகராஜா அவருடைய மகள்தான் பகவதிபிள்ளை கொச்சம்மா என்று எதை வைத்து சொல்கிறேன் என்றால் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ. 2 ஆவணங்களின் அடிப்படையில் சொல்கிறேன். அதை தவிர வேறு எந்த தனிப்பட்ட ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மூலம்திருநாள் மகராஜாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்ற விவரங்கள் தொியுமா என்றால் தொியாது. அவருக்கு வேறு பிள்ளைகள் உள்ளதா என காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. பகவதி பிள்ளை கொச்சம்மா மூலம்திருநாள் மகராஜாவிற்கு எத்தனையாவது பிள்ளை என்ற விவரம் தொியாது என்றால் சரிதான். மூலம்திருநாள் மகராஜாவின் ராணி யார் என்று எனக்கு தொியுமா என்றால் தொியாது. அவரின் பெயரும் தொியுமா என்றால் தொியாது. மூலம்திருநாள் மகராஜா எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரையில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தை ஆட்சி புரிந்தார் என்ற விவரம் தொியுமா என்றால் தொியாது. வா.சா.ஆ. 1 ஆவணத்திற்கு முன்பாக தாவா சொத்தில் இருந்ததாக சொல்லும் கட்டிடத்தை யார் எப்போது கட்டினார்கள் என்று தொியுமா என்றால் தொியாது. பட்டிகை சொத்தில் உள்ள கிணறு யார் எப்போது வெட்டியது என்ற விவரம் தொியுமா என்றால் தொியாது. பட்டிகை சொத்தில் வாயு மூலையில் கிணறு உள்ளது என்றால் சரியல்ல. ராஜா காலத்தில் அவ்வாறு கிணறு தோண்டுவதாக இருந்தால் வாஸ்து பார்த்து விஸ்வகர்மாக்களின் ஆலோசனைப்படி தோண்டுவார்கள்

என்றாலும் கட்டாயம் வாயு மூலையில் தோண்டியிருக்கமாட்டார்கள் என்றாலும் அது குறித்து எனக்கு தொ ியாது. வாயு மூலையில் கிணறு இருப்பதால்தான் இந்த சொத்து சம்பந்தமாக இது நாள் வரையிலும் வழக்குகள் தீரவில்லை என்றால் அது குறித்து எனக்கு தொ ியாது. பகவதிபிள்ளை கொச்சம்மா 1927 ல் இறந்தார் என காட்டுவதற்கும் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். அவர் இறந்து போன விவரமும் எனக்கு நேரடியாக தொ ியாது என்றால் சரிதான். பத்மநாபதம்பியின் வாரிசுகள் லீலாதம்பியும் மகள் ஜெயந்தி தங்கச்சியும் என காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 ஆவணமான பாக உடன் படிக்கை பத்திரத்தில் பட்டிகை சொத்து ஒரு இலக்கமாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பட்டிகையில் இல்லாத வழக்கு சொத்தை வேலாயுதம்தம்பி வெங்கடாசல ஐயருக்கு விற்கவோ, அதை வெங்கடாசல ஐயர் மகரிஷி இன்டர்நேஷனல் வேதிக் சயின்ஸ் சென்டருக்கு ஒப்பந்தம் செய்யவோ எந்த ஒரு அதிகாரமும் கிடையாது என்றால் சரியல்ல. மகரிஷி மகேஷ்யோகி வித்யா மந்திர் என்ற பெயரில் தமிழ்நாட்டில் பல இடங்களில் பள்ளிக்கூடங்கள் நடந்ததது என்றால் சரிதான். வாதி நிறுவனத்தின் தலைவரான வேதாந்தத்தை எனக்கு எவ்வளவு வருடமாக தொ ியும் என்றால் 1982 லிருந்து தொ ியும். மகரிஷி மகேஷ்யோகி வித்யா மந்திர் என்ற பெயரில் நடத்தப்பட்ட பள்ளிகள் அனைத்தையும் அந்த வேதாந்தம் தான் பார்த்து வந்தார் என்றால் சரிதான். அவர் முன்னர் விஸ்வ ஹிந்து பரிஷத்தில் நிர்வாகியாக இருந்தார் என்றால் சரிதான். விஸ்வ ஹிந்து பரிஷத் RSS ன் ஒரு பிா ிவு என்றால் சரிதான்.

வேலாயுததம்பி பெயரில் பட்டா இருந்ததா என்றால் இல்லை. பட்டா இல்லாததால் அவர் பெயரில் நில வரி கிடையாது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.